DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No. 177/2022**

**prosecution witness: Pw 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.C.No./20

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கணேசன் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**10.04.2023**

முதல் விசாரணை:

1. நான் பால்குளத்தில் வசித்து வருகிறேன். விறகு வியாபாரம் செய்து வருகிறேன்.கடந்த 21.08.2020-ம் தேதி மதியம் 02.30 மணிக்கு மண்டபம் கேம்ப் பிஸ்ரீஸ் பக்கத்தில் வைத்து எனது தம்பி இராமேஸ்வரத்தில் இருந்து நொச்சியுரணி கிராமத்திற்கு பங்சனுக்கு இருசக்கர வாகனத்தில் சென்ற போது மேற்கில் இருந்து கிழக்காக மண்டபம் கணேசன் என்பவர் காரை வேமாக ஓட்டிவந்து எனது தம்பி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார்.

2. எனது தம்பிக்கு தலையில் அடிபட்டது, காலில் முறிவு ஏற்பட்டது. உச்சிப்புளி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு பார்க்கமுடியாமல் மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு இரவு 10.00 மணிக்கு இறந்துவிட்டதாக சொன்னார்கள். மதுரையில் இருந்து வீட்டிற்கு கொண்டு வந்துவிட்டோம்.அதன்பின்பு வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது.அது அ.சா.ஆ-1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்து தான் புகார் மனு கொடுத்தேன் என்றால் இல்லை அன்றைக்கே கொடுத்துவிட்டேன். இந்த வழக்கில் புகார் நான் கைப்படஎழுதவில்லை போலீசார் எழுதினார்கள் அதில் கையொப்பம் செய்தேன்.எனக்கு சரியாக எழுதபடிக்க தெரியாது என்றால் சரிதான். என்னிடம் போலீசார் காவல் நிலையத்தில் வைத்து 4, 5 கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக வாங்கினார்கள் என்றால் அடிபட்டதற்காக வாங்கியதாக சொன்னார்கள்.

2. எனக்கு வழக்கு சம்பந்தமாக நேரடியாக எந்த விபரமும் தெரியாது என்றால் சரிதான்.வழக்கு சம்பந்தமாக விபரங்கள் எல்லாம் போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். சாட்சிகள் சண்முகம், பழனிசாமி, பிரபாகரன், கஜேந்திரன், சந்திரன் ஆகியோர்கள் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். அவர்கள் எல்லாரும் சம்பவம் நடந்ததை கேள்விபட்டு தான் சம்பவ இடததிற்கு சென்றார்கள் என்றால் சரிதான். என்னை வழக்க சம்பந்தமாக போலீசார் தனியாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

3. பின்பு இறந்துபோனவரின் கவனக்குறைவால் தான் நின்று கொண்டிருந்த வண்டி மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை.